உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.665/2023

பெயர் : அப்துல்ரசாக் (அ.சா.11)
தகப்பனார் பெயர் :முகமது இப்ராகிம்
கணவர் பெயர் :
வயது :47
கிராமம் :சென்னை, சைதாப்பேட்டை
வட்டம் :சென்னை
தொழில் : Grade I Bench clerk, நீதித்துறை

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

20.11.2025

முதல் விசாரணை:

எனக்கு மகேஷ் அ.சா.10 என்னுடைய நண்பர் தான். எனக்கு நன்கு தெரியும். மதுரை 5வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் வேலை செய்த அருண் என்பவரை தெரியும். சென்னையில் அருண் வேலை செய்ததால் எனக்கு பழக்கம் ஆகும். மகேஷ் அ.சா.10ன் திருமணத்திற்கு நான் சென்றிருந்தேன். அவருடைய திருமணம் 26.06.2017 அன்று திருமணமும், 25.06.2017 அன்று மாலை சுமார் 6.00 மணி அளவில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. நான் வரவேற்பிற்கும் கலந்து கொண்டேன், திருமணத்திற்கும் சென்றிருந்தேன். வரவேற்பிற்கும், திருமணத்திற்கும் அருண் கலந்து கொண்டார், நான் பார்த்தேன். அருண் என்பவருக்கு மூக்கன் என்ற புனைப்பெயரும் உண்டு. அருண் என்பவருக்கு முதலில் மூக்கன் என்று தான் பெயர் அதன்பிறகு அவர் பெயரை மாற்றி கொண்டார். மேற்படி விபரம் எனக்கு அருண் கூறி தான் தெரியும். இந்த வழக்கு தொடர்பாக ஒத்தக்கடை காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தாரா என்றால் போன் மூலமாக விசாரணை செய்தார். மேற்படி அருண் என்பவர் திருமணத்திற்கு வந்திருந்தாரா, என்னுடன் இருந்தாரா என்று

கேட்டார் நான் திருமணத்திற்கு வந்தார் என்றும், வரவேற்பிற்கு வந்தார் என்றும் நான் நடந்ததை கூறினேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.11.20 20:14:44 +0530

Assistant Sessions Judge

Melur